ஸ்ரீ தந்வந்தராயே நம :

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பரிதாபி
புரட்டாசி

October
1972



தொகுதி 34
பகுதி 10

Vol. 34
No 10

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S ஈச்வரன், L. I. M.

| | |
|---|---|
| நல்ல செய்தி ... | 185 |
| சில யூனனி மருந்துச் சரக்குகள் ... | 186 |
| பாண்டு ரோகம் ... | 190 |

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

| | |
|---|---|
| நர்ஸிங்ஹோம் | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) போன் நெ 27 |
| | (ஆபீஸ்) போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) போன் நெ. 26 |

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5
— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

**M|s. Kalia Brothers (Regd.)**

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** **Phone: Office - 3232**
**Resi - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,

கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]**

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: KALIA போன்: ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "     P, B. No. 1382.     போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

**உண்மையான ஆயுர்வேத**
**மருந்துகளுக்கும்**
**சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | 842 |
| 14. | No 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருதலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00   12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441   வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 34 | பரிதாபி புரட்டாசி | பகுதி 10 |
| Vol. 34 | 1972 அக்டோபர் | No. 10 |


श्री धन्वन्तरये नमः

## நல்ல செய்தி

தமிழ்நாடு அரசாங்கம் பி.ஐ.எம். படித்துத் தேறி அரசாங்க உத்யோகத்தில் சேர்ந்தவர்களுக்கு கெஜட் பதிவானவர்களுக்குள்ள அந்தஸ்து அளிக்கப்பெறும் என்று உத்தரவிட்டுள்ளதைப் பெரிதும் வரவேற்கிறோம் தகுதி அதிகமாகச் செய்யும் முன்னேற்றங்களுடன் அந்தஸ்தும் அதிகமாக்குவது மக்கள் சமுதாயத்தில் நன்கு பணியாற்றப் பெரிதும் இன்று தேவைப்படுகிறது இதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்துள்ளதற்கு வைத்ய சமூகம் நன்றி பாராட்டும்.

மத்திய அரசாங்கம் கிராம வைத்ய உதவி திட்டத்திற்காக இரண்டரைலக்ஷம் நாட்டு வைத்யர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. ஆயுர்வேதம் யூனானி சித்தம் ஹோமியோபதி என்ற நான்கு முறை வைத்தியர்களும் இதில் பங்குபெறுவார்கள். 1973-74ல் செயலுருப் பெறவிருக்கும் இந்த திட்டத்தின் கீழ் 1973-74ல் அரை லக்ஷம் வைத்யர்களும் 74-75லும் 75-76லும் ஒவ்வொரு லக்ஷம் வைத்யர்களும் சேர்க்கப் பெறுவார்கள். இரண்டாயிரம் மக்கள் தொகைக்கு ஒரு வைத்தியர் என்ற அடிப்படையில் அந்த அந்தப் பகுதியில்

ஏற்கனவே தொழில்புரிந்து வருபவர்களையே தேர்ந்து இந்திய வைத்ய முறை மத்திய ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் ஆங்காங்குள்ள சிறந்த அந்த அந்த முறை ஆஸ்பத்திரிகளில் நான்கு மாதங்கள் விசேஷப் பயிற்சி அளிப்பார்கள். இந்தப் பயிற்சி காலத்தில் மாதம் 150 ரூபாய் அலவன்ஸும் பிற்பாடு மாதம் 150 ரூபாய் ஸம்மானமாகவும் அளிக்கப்பெறும்.

அவர்களிடம் சிகித்ஸைபெற வரும் கிராம மக்களுக்கு 3 ஏக்கருக்குக் கீழ் ஆஸ்தி உள்ளவர்களானால் இலவசமாகவும் 11 ஏக்கர்வரை உள்ளவர்களுக்கு 10 பைசாவும் 11 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களுக்கு 25 பைசாவும் வசூலித்து அதையும் அந்த வைத்யருக்கு அளிக்கப்பெறும். வைத்யர் தனித்து பிராக்டீஸ் செய்ய அனுமதிக்கப் பெறமாட்டார். இந்த திட்டத்திற்கு முன்னோடியாக 1972-74ல் 29 ஜில்லாக்களைப் பொறுக்கி எடுத்து சுமார் 58 லக்ஷம் மக்களுக்கு 2900 கிராம வைத்யர்கள் மூலம் வைத்ய உதவி அளிக்கப்பெறும்.

---

## சில யூனானி மருந்துச் சரக்குகள்

மருந்துச் சரக்குகள் விஷயத்திலோ அவைகளின் செய்கையிலோ ஆயுர்வேதம் சித்தம் யூனானி அலோபதி என்ற மாறுபாட்டிற் கிடமில்லை. சுக்கு ஆயுர்வேதத்திற்குத் தனியான உரிமையல்ல. அதுபோன்ற ஆயுர்வேத மூலிகை சித்த மூலிகை, யூனானி மூலிகை என்ற பாகுபாடு ஒருவகையில் அர்த்தமற்றது. எனினும் யூனானி வைத்ய ஸம்பிரதாயத்தை அனுசரிப்பவர்கள் சில சரக்குகளை அதிகமாகக் கையாளுகின்றனர்; ஆயுர்வேத வைத்யர்கள் சில சரக்குகளை அதிகமாகக் கையாளுகின்றனர் என்ற வழக்கை யொட்டி யூனானிச் சரக்கு, ஆயுர்வேத மூலிகை என்ற பெயர் பொருளுள்ளதாகின்றது. கோஜிஹ்வா என்ற என்ற மூலிகை நமது நிகண்டு கிரந்தங்களில் அதிகமாகக் காணப்படினும் யூனானி முறையில் போல அதன் உபயோகம் ஆயுர்வேத முறையில் காணோம். அம்மாதிரியே மணத்தக்காளிக் கீரையை ஆயுர்வேத வைத்யர்கள் உபயோகிப்பதுபோல யூனானி வைத்யர்கள் அதிகமாக உபயோகிப்பதில்லை. அவ்விதமே மணத்தக்காளி விதையை யூனானி வைத்யர்கள்போல ஆயுர்வேத

வைத்யர்கள் உபயோகிப்பதில்லை. இதெல்லாம் அவரவர்கள் அனுபவத்தை யொட்டிய பழக்கத்தைக் காரணமாகக் கொண்டது.

யூனனி சரக்குகளில் சிலவற்றை இன்று ஆயுர்வேத வைத்யர்கள் அதிகமாகக் கையாளுகின்றனர். அவைகளைப் பற்றிய குறிப்பே இக்கட்டுரையின் விஷயமாகும் இவைகளில் சில ஆயுர்வேத மூல கிரந்தங்களில் இடம் பெறுபவையே.

காவ்ஜபான் (கோஜிஹ்வா) பனப்ஷா, ஜூபா. இஸப்கோல், அஸாரூன். ஸப்ஜா, ஜத்வார். ஜஹரமோஹரா, கஹருபா, ஸங்கேயசப் போன்றவை வைத்யர்களால் மிகவும் கையாளப்படுகின்றன. அவைகளைப் பற்றிய எல்லா விவரத்தையும் அறிவது வைத்யர்களின் சிகித்ஸாயுக்தி நிர்ணயத்தில் மிகவும் உதவும் என்பதில் ஸந்தேகமில்லை.

1. கோஜிஹ்வா—காவுஜபான்.

காவுஜபான் இரண்டு விதமாக தமிழ்நாட்டுக் கடைகளில் கிடைக்கிறது பர்க்காவுஜபான் அல்லது காவுஜபான் என்ற இலை, குலே காவ்ஜபான் என்ற பூ ஸம்ஸ்கிருதத்தில் கோஜிஹ்வா, கோஜீ; ஹிந்தி மராட்டி குஜராத்தியில் காவுஜபான். அராபியில் லிஸா நுஸ்ஸெளர். . லேடினில் ஆனேஸ்மா பாக்டிரடம், என வழங்குகின்றது. உத்பத்தி ஸ்தானம்-ஹிமாலயத்தில், காச்மீரத்தில் குமாயூன் மலைத்தொடர் வரை. இரானிலும் ஆப்கனிஸ்தானத்திலும் உண்டாகும் காவ்ஜபான் இந்தியச் சரக்கை விடத் தரத்தில் உயர்ந்தது. இரானில் உத்பத்தியாவது மிகவும் உயர்ந்தது.

வருஷம் முழுவதும் பசுமையுடன் 1—2½ அடி உயரம் உள்ள செடி. இலை முட்டை வடிவத்தில் தடித்துப் பிளவு இல்லாமல், மேல் ஜவ்வரிசி அல்லது மணல் போன்ற சுரசுரப்பான முடிச்சுகளுடன் காணும். செடி—இலை எங்கும் மேல் அடர்ந்து மயிர் போன்ற அமைப்பு. தேள்கொடுக்கு போன்று வளைந்த ஐந்து இதழுடனுள்ள பூ. ஆணில் கேஸரம் ஐந்திருக்கும் பெண்ணுகில் ஒன்றுதான். புஷ்பம் வாடியதும் நிறம் மாறி கருஞ்சிவப்பாக இருக்கும். இதன் பூ தான் அதிகமாக மருந்துகளில் உபயோகமாகிறது. இலையும் செடி முழுவதும் கூட மருந்தாகின்றது.

சுவையில் துவர்ப்பு கசப்பு இனிப்பு ; விபாகத்தில் இனிப்பு ; வீர்யத்தில் சீதம், வாயுவை உண்டாக்கும், மலத்தைக்கட்டும்; ஹிருதயத்திற்கு நல்லது; எளிதில் ஜீர்ணமாகும். கபபித்தங்களைப்

போக்கும். காஸம், அருசி, ச்வாஸம், பிரமேஹம், ரத்த விகாரம், விரணம். ஜ்வரம் இவைகளைப் போக்கும். முக்யமாக சித்தப்பிரமை உந்மாதம், ஹிருதயப் படபடப்பு இவைகளில் மிகவும் உபயோக மானது. ரத்தசுத்தி செய்வதற்கும் சிறுநீரைப் பெருக்குவதற்கும் புஷ்டியளிப்பதற்கும் இதை உபயோகிக்கின்றனர் கீல்வாயு, வெட்டை, வெண்குஷ்டம், ஆண்மையின்மை இவைகளில் நல்ல துணை மருந்து, மூத்திராசய நோய்களில் இதன் உபயோகம் நல்ல குணமளிக்கின்றது. ஹிருதயப் படபடப்பைச் சீராக்குவதில் மிகவும் நல்லது.

ஸங்கேயசப் கஹ்ருபா போன்றவைகளைப் பிஷ்டி செய்ய இதன் அர்க்கத்தை உபயோகிக்கின்றனர்.

காவுஜபான் ஸர்பத். காவுஜபான் 50 கிராம், நீலோத்பலக் கிழங்கு* 40 கிராம், உஸ்துகுததுஸ், ரோஜாப்பூ மல்லி, காசினி விதை. வெண் சந்தனம் ஏலம் வகைக்கு 20 கிராம் இவைகளை 2 லிட்டர் ஜலத்தில் 250 மிலி. மீதமாகக் கஷாயமிட்டு 800 கிராம் சர்க்கரை சேர்த்துத் தயார் செய்த பானகம் ஹிருதயத்ரவம் எனும் ஹிருதய படபடப்பில் மிகச் சிறந்தது. மூத்ராசய நோய்களையும் போக்குகின்றது. ரத்தத்தையும் சுத்தி செய்கின்றது. சளி இருமலிலும் இதன் ஸர்பத் நல்லது.

வாய் வேக்காளத்தில் காவ்ஜபானைப் பானையிலிட்டு மூடி அந்தர் தூமமாக எரித்தெடுத்த கரியைத் தேன் விட்டரைத்து நாக்கிலும் வாயிலும் தடவிக்கொள்ள எரிச்சல் உடன் அடங்கும். புண் ஆறும்.

மற்றும் கமீரே காவஜபான் என்ற ஸர்பத், காவ்ஜபான் சூர்ணம் போன்ற யோகங்கள் மிகவும் பிரஸித்தமானவை அவை களை யூனானி யோகத் தொடரில் பின்னர் வெளியிடுகிறோம்.

---

* நீலோத்பலக் கிழங்கு அல்லது நீலோத்பலப் பூவின் இதழ் களுக்கு ஹிருதயத்தில் டிஜிடாலிஸ் போன்ற சக்தி உண்டு. நாட்பட்ட ஜ்வரம் முதலிய நோய்களில் நாடித் துடிப்பு ஹிருதய மாம்ஸபேசிகளின் பலக்குறைவால் தளர்ந்து காணும். அங்கு இது நல்ல குணமளிக்கின்றது. தாமரை அல்லது நீலோத்பலக் கிழங்கு அல்லது பூவைப் பாண்ட கஷாயமாகவோ போட்டு அல்லது மற்ற ஜ்வரஹர கஷாயச்சரக்குகளுடன் சேர்த்து இதையும் போட்டுக் கஷாயம் செய்து சாப்பிட ஹிருதயம் பல மடையும், ஹிருதயப் படபடப்பு அடங்கும். அனேகமாக ஜ்வரஹர கஷாயங்களில் அதிலும் பித்தப் பிரதான நிலையில் நீலோத் பலமோ தாமரையோ அதிகமாகக் காணலாம்.

2. பனப்ஸா – காமபுஷ்பம் :

ஸம்ஸ்கிருதத்தில் ஸித்தபேஷஜ மணிமாலையில் இதை பனப்ஸா, பனப்ஸிகா என்றே குறிப்பிடப் படுகிறது. மஹா மஹோபாத்யாய பாகீரத ஸ்வாமி காமபுஷ்பம், வனேசம், ஆராம புஷ்பராஜம் என்ற பெயரில் குறிப்பிடுகிறார். ஹிந்தி குஜராதி மராட்டியில் பனப்ஸா. அராபி பனப்ஸஜ், ஆங்கிலத்தில் ஸ்வீட் வயலெட், லாடினில் வயலா ஆடோரேடா.

உத்பத்தி ஸ்நானம்—இரான் ஹிமாலயம் காச்மீர். ஹிமாலயத்தில் 5000 அடிக்கு மேல் இது தானே அடர்ந்து வளர்கின்றது. சில இடங்களில் பயிரிடப்படுகின்றது.

பனப்ஸா செடி 4, 5, அங்குல உயரம் உள்ளது, இலை வட்டமாக ஹிருதயம் போன்றும் பிரமியிலை போன்றும் மயிர் உள்ளதாகவும் காணப்படும். பூ நாவல்பழ நிறத்தில் கொத்துக்கொத்தாக இருக்கும் பூவிலிருந்து நல்ல மணம் பரவி நிற்கும். பூ வாடியதும் நீலநிறத்தில் காணும். கடையில் பனப்ஸாவின் செடிமுழுவதும் பனப்ஸாவென்ற பெயரிலும், வேர் பீகே பனப்ஸாவென்றும், பூ குலே பனப்ஸா என்றும் கிடைக்கின்றது. ஆனால் பனப்ஸாவின் வேருக்குப் பதிலாக இரஸாவேர் மாற்றிக் கொடுப்பதுமுண்டு.

பூ பஞ்சாங்கம், வேர் மூன்றும் மருந்துச் சரக்காகும்.

வீர்யத்தில் சீதம், மிருது, பித்தஹாரம், ரத்தப் பிரஸாதகம் ஸ்னேஹனம். தூக்கமளிக்க வல்லது. தொண்டை, மார்பை மிருதுவாக்கும். ஜ்வரம், அபஸ்மாரம், வீக்கம் தாகம், இவைகளைப் போக்கும். அதிமதுரத்துடன் இதை அரைத்துப் பத்துப் போட வீக்கம் குறையும்.

பனப்ஸாவை நன்கு சூர்ணம் செய்து 8 பங்கு வென்னீரில் இரவு ஊரவைக்கவும். காலையில் $\frac{1}{8}$ பங்கு மீதமாகக் கஷாயமாக்கி வடிகட்டி 2—3 பங்கு சர்க்கரை சேர்த்து ஸர்பத் தயாரித்துக் கொள்ளவும். பித்த ஜவரத்தில் நாவரட்சி எரிச்சல் அதிகமாக இருக்கும்போது இதைக் கொடுக்க அவை சமனமடைந்து ஜ்வரமும் குறையும். கசப்பு கஷாயம் சாப்பிட விரும்பாத நோயாளி, குழந்தை கர்ப்பிணி போன்றவர்களுக்கும் காங்கை மிக்கவர்களுக்கும் இது அதிகமாக ஹிதமானது.

குலே பனப்ஸா, காவ்ஜபான், ஜூபர், காசினிவிதை, அதிமதுரம். நன்னாரி, சீந்திற்கொடி, வேப்பம்பட்டை உள்பக்கம், கடுகுரோஹிணி, நிலவேம்பு, தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி

கடுக்காய் தோல், இவைகளின் கஷாயம் கபஜ்வரம் நாட்பட்ட தலேச்சளி, நாட்பட்ட ஜ்வரம், கபத்துடன்) நாட்பட்ட இருமல் சிறு குழந்தைகளுக்கு வரும் ஜ்வரம் இருமல் இவைகளில் நல்லது.

குலே பனப்ஸாவைக் கொண்டு குல்கந்து செய்வதுண்டு. உஷ்ண நோய்களிலும் வெயில் நாட்களிலும் ஆப்கனிஸ்தானிலிருந்து வருவதைவிட காச்மீரத்தில் கிடைப்பதுதான் குல்கந்து செய்வதற்கு நல்லது. காச்மீரத்தில் உற்பத்தியாவதில் பூவில் விஷசக்தி கிடையாது. ஈரான் ஆப்கானிஸ்தானத்தில் கிடைப்பதில் ஒருவித விஷசக்தி உண்டு. அதனுல் அவைகளைக் கொண்டு குல்கந்தாக தயாரிப்பது நல்லதல்ல - என்று ஸ்ரீ பாகீரதஸ்வாமி சொல்கிறுர். குல்கந்து மலபந்தத்தில் நல்லது

புற்றுநோயில் பனப்ஸாவின் பஞ்சாங்கத்தைக் கஷாயமாக்கிச் சாப்பிடலாம். அரைத்து மேலுக்கு பூசலாம். வலியும் ரத்தப்பெருக்கும் இதனுல் குறைகிறது பஞ்சாங்கத்தின் கஷாயத்தில் புண்ணே அலம்பலாம். இது நல்ல குணம் தரும் என்று தமது அநுபவத்தை பாகீரதஸ்வாமி எழுதுகிறுர்.

உஷ்ணத்தால் ஏற்படும் தலேவலியிலும் தூக்கமின்மையிலும் இதை அரைத்துத் தலேக்குப் பத்துப்போடலாம் தலேவலியில் இதன் சூர்ணத்தை மூக்கில் வைத்து உறுஞ்சுவதுமுண்டு

---

# பாண்டு ரோகம்

ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ B. வைத்யநாதன், சென்னே

---

"தோஷா: பித்தப்ரதாநாஸ்து யஸ்யகுப்யந்தி தாதுஷு. சைதில்யம் தஸ்ய தாதூநாம் கௌரவம் சோபஜாயதே || ததோ வர்ண பல ஸ்நேஹா: யே சாந்யேப்யோஜஸோ குணா: வ்ரஜந்தி க்ஷயமத்யர்த்தம் தோஷதூஷ்ய ப்ரதூஷணுத் || ஸோல்பரக்தோல்பமேதஸ்க: நி: ஸார: சிதிலேந்த்ரிய: வைவர்ண்யம் பஜதே" எனப் பித்தத்தைப் பிரதானமாகக்கொண்ட தோஷ கோபத்தால் பாண்டு உண்டாகிறது. அதனுல் ரஸாதி தாதுக்கள் தளர்கின்றன. தாதுக்களின் அடர்த்தியான நெருக்கமான நிலே

குலைந்து இடைவெளி அதிகமாகிறது. இவற்றினூடே ஜலாம்சம் சிறுகச் சிறுகத் தங்கி உடல் கனத்து நாளடைவில் சோபம் ஏற்பட ஹேதுவாகிறது.

இது ஓஜஸ்ஸின் தரக்குறைவு, நாசம் இவற்றால் ஏற்படும் ரோகம் எனவே ஓஜஸ்ஸின் குணங்களான நிறம், பலம், களிப்பு, புஷ்டி முதலியவை குறைகின்றன. எனவே பாண்டு ரோகி ரக்தம் குன்றி, (மாம்சப் பற்று) சதைப்பற்று அற்றுக் காணப்படுகிறான். அதிகரித்த பித்தம் ரஸவஹ ஸ்ரோதஸ் ஸான ஹ்ருதயம், தமநிகள் வழியே வெளியேறுகிறது. பின்னர் தசைகளுக்கும் தோலுக்கும் நடுவில் தேங்கி நிற்கிறது. அத்துடன் கபம், வாதம், ரக்தம், மாம்சம், தோல் ஆகியவற்றையும் சீர்கெடுக் கிறது. இவ்விதமான தோஷ தூஷ்யஸம் மூர்ச்சனையின் காரண மாக வெளுமையோ, பசுமையோ, மஞ்சள் நிறமோ சரீரத்தில் காணப்படுகிறது. பெரும்பாலும் வெளுமையே தோன்றுவதால் பாண்டு எனக் கூறப்படுகிறது.

பூர்வ ரூபமாக மார்பு படபடப்பு, உடல் முழுவதும் வரட்சி, வியர்வை இன்மை, களைப்பு முதலியவையும், பின்னர் காது இரைச்சல், அக்னி மாந்தியம், அரோசகம், உடம்புவலி, இமைகள் வீங்குதல் மற்றும் பல குறிகள் காணப்படலாம்.

இதில் பொதுவாகத் தண்ணீர் வேட்கை, வியர்த்தல், குளிர்ந்த நிலையை நாடுதல், உஷ்ணமான நிலையும், புளிப்புச் சுவையும் ஒத்துக்கொள்ளாதது மார்பு எரிச்சலுடன் கூடிய புளித்த ஏப்பம், உடல் துர்நாற்றம், கண் இருட்டுதல், மயக்கம், அதிகம் மலம் கழிதல், ஆகிய குறிகள் காணப்படலாம். இவைகள் அனைத்தும் பித்தம் அதிகரித்திருப்பதைக் குறிப்பிடுகின்றன.

நிற்க, அக்னிமாந்தியமும், ஆகாரத்தின் பால் விருப்பு இன்மையும், இங்கு எப்படி ஏற்படலாம்? பித்தம் அதிகரித்து இருந்தும் இந்நிலை உண்டாகக் காரணம் என்ன? இங்கு பித்தம் ஜாடராக்னி, காயாக்னி இவைகளின் தத்துவங்களை சிந்தித்தல் அவசியம். "நஹி பித்தவ்யதிரேகாத் அந்யோ அக்நி ருபலப்யதே! ஸ ஏவ தஹந பாசநாதிஷு ப்ரவர்த்தமாநோ அக்நிரிதி ஸம்ஜ்ஞாம் லபதே ||" என ஸுச்ருதர் தான் பித்தமும் அக்நியும் ஒன்று எனக் கூறுகிறார்.

காய சிகித்ஸா ப்ரவர்த்தகரான சரகர் பித்தத்திற்கு அந்த ஸ்தானத்தை வழங்க விரும்பவில்லை போலும்.

" தத்ர கேசிதாஹு : நஸம வாத பித்த ச்லேஷ்மாணோ ஜந்தவ : ஸந்தி விஷமாஹாரோப யோகித்வாந் மனுஷ்யாணாம், தஸ்மாச்ச வாத ப்ரக்ருதய : கேசித், கேசித் பித்தப்ரக்ருதய ; கேசித் புந : ச்லேஷ்ம ப்ரக்ருதயோ பவந்தீதி | தச்சாநுப பந்நம் | கஸ்மாத்காரணாத் ? ஸம வாதபித்த ச்லேஷ்மாணம் ஹி அரோக மிச்சந்தி பிஷஜ : யத : ப்ரக்ருதிச் சாரோக்யம் ஆரோக் யார்த்தா : பேஷஜ ப்ரவ்ருத்தி : ஸாசேஷ்ட ரூபா, தஸ்மாத் ஸந்தி ஸமவாத பித்த ச்லேஷ்மாண : நகலு ஸந்தி வாதப்ரக்ரு தய: பித்த ப்ரக்ருதய : ச்லேஷ்மப்ரக்ருதயோ வா | தஸ்ய தஸ்ய கிலதோஷஸ்யாதிக்யாத் ஸாஸா தோஷப்ரக்ருதி ருச்யதே மநுஷ்யாணாம், நச விக்ருதேஷு தோஷேஷு ப்ரக்ருதிஸ் தத்வம் உப பத்யதே, தஸ்மாந்நைதா : ப்ரக்ருதய : ஸந்தி, ஸந்தி து கலுவாதலா : பித்தலா : ச்லேஷ்மலாச்ச, அப்ரக்ருதிஸ் தாஸ்துதே க்ஞேயா :" || ச. பி. 6 – 13

என வாத பித்த கபங்கள் பெரும்பாலும் " தூஷணாத் தோஷா :" என சீர்குலைப்பதையே ஸ்வபாவமாகக் கொண்டிருக் கின்றன. அந்தந்த தோஷங்கள் அதிகரித்த நிலையில் ஜனித்த வர்களை வாதலன், பித்தலன், ச்லேஷ்மலன் எனக் குறிப்பிட வேண்டுமே தவிர, அவை ப்ரக்ருதியை உண்டாக்குவதாகக் கூறக்கூடாது ப்ரக்ருதி என்பது இயற்கை நிலை அதிகரித்து இருப்பதை இயற்கை நிலை எனக் கூறுவது பொருந்தாது என்கிறார்.

இந் நிலையில் தரக்குறைவான பித்தத்தை ஆகாரங்களைப் பக்குவப்படுத்தும் அக்நியின் நிலைக்கு உயர்த்துவது எங்ஙனம் ? ஆதலால் மற்ற ஸம்ஹிதைகளில் காணப்படுவது போன்ற பாசக, ப்ராஜக, ஆலோசக, ரஞ்ஜக, ஸாதக என்ற ஐந்து பிரிவுகள் சரக ஸம்ஹிதையில் குறிப்பிடப்படவில்லை, இது ஒரு மிகப்பெரிய ஸித்தாந்த வேறுபாடு

இதேபோல் கிரந்தத்தின் பெரும் பகுதி சிதைந்து இருப் பினும், பேள ஸம்ஹிதை சிறந்த காய சிகித்ஸா கிரந்தம் ஆயுர்வேத ஸித்தாந்தங்கள் இங்கு நன்கு காணப்படுகின்றன.

" யோயம் நிர்தஹதி க்ஷிப்ரமாஹாரம் ஸர்வதேஹி நாம் |
அநாதி மத்ய நிதந : காயாக்நி : ஸ ஸமீர்யதே || "

" அதாத்ர ப்ரச்நோ பவதி கோத்ர கல்வாஹாரம் பசதி, வாத : பித்தம், ச்லேஷ்மாநு பானம் வா இதி ! நேத்யாஹ புநர் வஸுராத்ரேய : | யத்யேதே பாகஹேதவ : ஸ்யு : தர்ஹி நஹிகச்

சிதிஹ துர்பலாக்நி : ஸ்யாத், வாதாதீநாம் ஸந்நிஹிதத்வாத் ஸாநுபாநத்வாச்ச | அதாஸ் யோஷ்மா தேஜச்ச சரீரஸ்த மாஹாரம் பசத: தம்காயாக்நி ரிதி வித்யாத் | பேள சா 4-1". எனக் காயாக்நி பித்தத்தைத் தவிர வேறு என அடித்துக் கூறுகிறார். "சரீரஸ்தமாஹாரம் பசத:". எனப் பாகம் ஆமாசயத்திலோ, பக்வாசயத்திலோ மட்டும் முடிவடைந்து விடுவதில்லை சரீரம் முழுவதும் வியாபித்து உள்ளது எனவும் பொருள்பட பதப்ரயோகம் செய்துள்ளார். இந்த கோணத்திலிருந்து நோக்கினால், ஆமாசயம், பக்வாசயம் என்பது குறிப்பிட்ட ஓர் அவயவத்திற்கு மட்டும் பெயரல்ல. சரீர ரஸத்தின் ஆம நிலையையும், பக்குவ நிலையையும் பொருத்தது. ஆமமான ரஸத்தைத் தாங்கி நிற்கும் சரீரமே ஆமாசயம் எனவும் பக்குவமான ரஸத்தைத் தாங்கி நிற்கும் சரீரமே பக்குவாசயம் எனவும் மிகவும் வியாபகமான ஓர் பொருள் தோன்றுகிறது. இந்த விளக்கம் தான்.

"ஊஷ்மணோல்ப பலத்வேன தாதுமாத்ய ம பாசிதம் |
துஷ்டமாமாசய கதம் ரஸமாமம் ப்ரசக்ஷதே ||

என்ற ஸித்தாந்தத்திற்குப் பொருள் கூற உதவும்.

"அதாஸ்யோஷ்மா தேஜச்ச" என்பதைப் போலவே "ஊஷ்மணோல்ப பலத்வேந" என்ற பதப் ப்ரயோகமும் இங்கு கவனிக்கத் தகுந்தது.

மேலும் இந்த பேளரும் 'பாசகாதி பஞ்சக "த்தை பஞ்சதா யே சாரீரா: பச்யந்தே" என அந்தந்த வேலைகளைச் செய்யக்கூடிய "சாரீர பாவ"ங்களாகவே குறிப்பிடுகிறார். ஐந்துவகை பித்தங்கள் என்றல்ல.

"காயதி சப்தம் கரோதீதி காய: ஜடராக்னி: அங்குலீ பிஹிதே கர்ணயுகளே "சுக்" இதி சப்தச்ரவணாத் தாத்ஸ்த்யாத்வா காயசப்தேந அக்நிருச்யதே |. உக்தம்ச போஜே - ஜாடர: ப்ராணிணமக்னி: காய இத்யபிதீயதே |. யஸ்தம் சிகித்ஸேத் ஸீதந்தம் ஸவை காய சிகித்ஸக: |". என சிவதாஸ ஸேனர். காதை மூடிக்கொண்டால் உள்ளூர ஓர் சப்தத்தை நாம் உணர்கிறோம். இந்த சப்தம் காய என்றழைக்கப்படும் ஜடராக்னியால் ஏற்படுகிறது. அதுதான் காயாக்னி. இதையே தான் கீதையில் பகவான் கிருஷ்ணர்.

" அஹம் வைச்வாநரோ பூத்வா ப்ராணிநும் தேஹமாச்ரித : |
ப்ராணுபான ஸமாயுக்த : பசாம்யந்நம் சதுர்விதம் || "

எனக் கூறுகிறுர். இங்கும் "தேஹமாச்ரித :" என்ற பதப்ரயோகம் கவனிக்கத் தகுந்தது. வாக்படரும் "ஸ்வஸ்தாநஸ் தஸ்ய காயாக்நே : அம்சா : தாதுஷு ஸம்ச்ரிதா :" எனக் காயாக்னியின் அம்சங்களே தாதுக்களில் அமைந்திருப்பதாகக் கூறுகிறுர்.

" நாபி மத்யே சரீரஸ்ய விஞ்ஞேயம் ஸோம மண்டலம் |
ஸோம மண்டல மத்யஸ்தம் வித்யாத்தத் ஸூர்ய மண்டலம் ||
ப்ரதீப வச்சாபி நிருணும் தஸ்ய மத்யே ஹுதாசன : |
தேஹிநு போஜநம் புக்தம் நாநாவ்யஞ்ஜன ஸம்ஸ்கிருதம் ||
ஸூர்யோதிவி யதாதிஷ்டன் தேஜோயுக்தோ கபஸ்திபி : |
விசோஷயதி ஸர்வாணி பல்வலாநி பயாம்ஸிச ||
தத்வத் சரீரிணும் புக்தம் ஜாடரோ நாபிஸ்மஸ்தித : |
மயூகை : க்ஷிப்ரமாதத்தே ஸூர்யகாந்தோ மணிர்யதா ||
க்ஷிப்ரம் ஸம்யக் ப்ரத்ஹதி கோமயம் கோஷ்ட மேவச |
ஸ்தூலகாயேஷு ஸத்வேஷு யவமாத்ர ப்ரமாணத : ||
ஹ்ரஸ்வ தகாயேஷு ஸ்த்வேஷு த்ருடி மாத்ர ப்ரமாணத: |
க்ருமி கீட பதங்கேஷு வாயுவாத்ரோSவதிஷ்டதி ||
யஸ்தம் சிகித்ஸேத் ஸீதந்தம் வ்யாதிநா சாபி தேஹிநம் |
ஆயுர்வேதாபி யோகேந ஸவை காய சிகித்ஸக . || "

என பேளரும் காயாக்நியை ஸூர்யனுக்கு ஒப்பிட்டு விளக்குகிறுர். காய சிகித்ஸைப் பகுதியில் அடங்கிய ரோகங்கள் பெரும்பாலும் காயாக்நியின் விக்ருதியினுல் தான் தோன்றுகின்றன. அதனதன் சிகித்ஸையும் காயாக்நி வர்த்தனத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால்தான் காயம் என்ற அக்நிக்குச் செய்யப்படும் சிகித்ஸை எனக் காய சிகித்ஸை என்ற பெயர் வந்துள்ளது

சாகஸம்ஹிதையின் வாத கலா கலீய அத்தியாயத்தில் ஒரு பகுதியான மரீசி மஹரிஷியின் "அக்னி ரேவ சரீரே பித்தாந்தர்கத," என்று அக்நி பித்தத்துள் அடங்கியது என்ற குறிப்பு காணப்படுகிறது. இதைத் தெளிவு படுத்தும் சக்ரபாணி தத்தர் பித்தாந்தர் கத: இதி வசநேந சரீரே ஜ்வராதி யுக்த வஹ்நி நிஷேதேந பித்தோஷ்ம ரூபஸ்த வஹ்நே : ஸத்பாவம் தர்சயதி, நது பித்தாதபேதம், பித்தேந அக்னி மாந்தியஸ்ய கிரஹண்யத்யாயே வக்ஷ்யமாணத்வாத் ததா பித்த

ஹாஸ்ய ஸர்ப்பிஷ: அக்நிவர்த்தனத்வேந உக்தத்வாத்.” ச. ஸூ. 13-11. என பித்தத்தை அக்நியாகக் கூறுவது அவ்வள வாகப் பொருந்தாது என்கிருர். பித்தமே அக்நி மாந்தியத்தையும் பித்த ஹரமான நெய் அக்நி வர்த்தகமாகவும் அமைந்துள்ளதைக் காரணம் காட்டுகிருர்.

எனவே ஸித்தாந்த ரீதியில் பித்தம் வேறு. அக்நி வேறு. பாசகம், ப்ராஜகம், ஆலோசகம், ரஞ்ஜகம், ஸாதகம் என்பவைகள் அந்தப் பணியைப் புரியும் பல்வேறு சரீர பாவங்கள் எனப் பொருள்படுகிறது. இந்த விளக்கம் பித்தம் அதிகரித் திருப்பினும், பாண்டுவில் பசி இன்மை எவ்விதம் ஏற்படலாம் என்பதை நன்கு விளக்கிவிடுகிறது.

ஆகவே பித்த வர்த்தகமான ஆஹாரங்களால் அதிகரித்த பித்தம் ரஸாதி தாதுக்களை சீர்குலைத்து ரோகத்தைத் தொடக்கும் முறையிலேயே அமைகிறது.

நிற்க தாத்வக்னியை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் ஸ்ரோ தஸ்ஸில் ஸஞ்சரிக்கும் பித்தத்தை தோஷமாகவே கொள்ள வேண்டும் அதேபோல் “ப்ரீணனம் ஜீவனம் லேப: ஸ்நேஹோ தாரண பூரணே | கர்ப்போத்பாதச்ச தாதூநாம் ச்ரேஷ்டம் கர்ம க்ரமாத்ஸ்மிருதம் । என்ற ஸப்த தாதுக்களின் கார்யங்களை விட அதிகமாக வாத பித்த கபங்கள் ஆக்க முறையில் (Constructive) ஆற்றும் விசேஷப்பணி என்ன? ‘தூஷயந்தி தூஷ்யந்தே இதி வா தோஷா: எனச்சீர்கெடுவதையோ [சீர்கெடுப்பதையோ ஸ்வபாவமாகக்கொண்டவைகள் என்ற காரணப்பெயரே அவை களின் நிலைகளை விளக்குகின்றன. மற்றவைகளைக் கெடுக்காத முறையில் ஆரோக்கியத்திற்கு உதவலாமே தவிர அவற்ருல் வேறு விசேஷமான உபயோகம் மிகக்குறைவு எனத்தோன்று கிறது.

ஸர்வ ஏவ கலு வாதபித்த ச்லேஷ்மாண: ப்ரகிருதி பூதா: புருஷமவ்யாபந்நேந்திரியம் பல வர்ண ஸுகோப பந்ந மாயு ஷாமஹதா உப பாதயந்தி | ச. ஸூ. 12 - 13 என ‘அவ்யாபந் நேந்திரியம் பல வர்ண ஸுகோப பந்நம்” அதாவது இந்திரி யங்கள் நன்கு அமைந்து, பலம், நிறம், ஸௌக்கியம் நிறைந் தவனை ஸுகமாக வைக்கிறது என முன்கூறிய கருத்திலேயே விளக்குகிருர்.

ஆகவே, ஆகாரத்தைப் பக்குவப்படுத்துவது என்பது பித்தத் திற்கு அப்பாற்பட்ட காரியம். அது பெரும்பாலும் விக்ருதியை

உண்டுபண்ணுமே தவிர ப்ராகிருத காரியத்தைச் செய்ய சக்தி குன்றியது. ஆனல் ப்ராகிருத காரியத்திற்கு இடையூருக அமையாதிருக்கலாம்.

ஆனல் பித்தம் ஆக்நேயாம்சம் உள்ளது என்பதை பித்தோஷ்மா எனப்பல இடங்களில் சரகரே குறிப்பிடுகிருர். விக்ருதியைச் செய்யும்போது அதன் தீக்ஷ்ணேஷ்ண குணம் அதிகரித்து விடுகிறது. ஆனல் ''சரீரேஸ்விந்ந பூயிஷ்டே'' என உடல் முழுவதுமே வெந்தது போலிருப்பதால்தான்

நஸ்வேதயேத திஸ்தூல ரூக்ஷ துர்பல மூர்ச்சிதாந் |
ஸ்தம்பநீய க்ஷத க்ஷீண க்ஷாம மத்ய விகாரிண : ||
திமிரோதர வீஸர்ப்ப குஷ்ட சோஷாட்ய ரோகிண : ||
பீத துக்த ததிஸ்நேஹ மதூந் க்ருத விரேசநான் ||
க்ஷுத் திருக்ஷ்ணு காமலா பாண்டு மேஹின : பித்தபீடிதாந் ||

என வியர்ப்பிக்கத்தகாதவர்கள் வரிசையில் பாண்டு ரோகியையும் காமலா ரோகியையும் எண்ணியுள்ளார். ஸ்வேத சிகித்ஸையால் ஏற்படவேண்டிய ''தோஷஸ்ரம்ஸநம்'' இவர்கள் விஷயத்தில் அந்த சிகித்ஸை இல்லாமலே ஏற்பட்டிருப்பதுதான் அதற்குக் காரணம். இந்நிலையில் மறுபடியும் ஸ்வேத சிகித்ஸை தோஷஸ்ரம்ஸநத்தை அதிகரித்து ரோகத்தையும் அதிகரிக்கும். ஆதலால் ஸ்வேதனத்திற்கு நேர்மாருன ஸ்தம்பந சிகித்ஸைதான் பாண்டுரோகத்தில் அமைந்துள்ளது. இதை மனதில் கொண்டு தான் ''பித்தக்ஷீராக்நி ... ... ... ஸ்தம்பநீயா நிதர்சிதா'' என்ற சிகித்ஸாஸூத்ரம் நிலைபெற்றுள்ளது.

நிற்க, ''ஸ்தம்பநம் ஸ்தம்பயதியத் கதிமநாசலம்'' என திரவித்து ஓடும் நிலையிலுள்ள பொருள்களை ஓடவிடாது தடுத்து நிறுத்தி இறுகவைப்பது ஸ்தம்பநம் எனப்படும். பிரகிருதத்தில் பாண்டுரோகத்தில் அவ்விதம் திரவித்த நிலை இருக்கிறதா என்று யோசிக்கலாம்.

தொடக்கத்தில் தோஷங்கள் ஓஜஸ் என்ற பொருளின் தரக்குறைவை உண்டாக்கி அதன் அளவையும் குறைத்து பாண்டுரோகத்தை உண்டுபண்ணுவதாக நாம் கண்டோம். இந்த ஓஜஸ் என்பது என்ன ? ஓஜஸ்ஸைப்பற்றிய பொதுவான விளக்கம் எல்லோருக்கும் தெரிந்திருப்பினும் மூலகிரந்தங்களிலும் வியாக்யானங்களிலும் ஓஜஸ் என்பதற்குப் பல விளக்கங்கள் காணப்படுகின்றன. ''தத்ர ரஸாதீநாம் சுக்ராந்தானும் தா

தூனும் யத்பரம் தேஜ : த்த கலு ஓஜ :, ததேவ பல மித்யுச்யதே, ஸ்வ சாஸ்திர ஸிந்தாந்தாத் | '' ஸு ஸூ 15-23 எனப் பிறர் அபிப்பிராயம் எவ்விதமிருப்பினும் தன்னைப்பொறுத்த வரையில் ஓஜஸ் ஸப்த தாதுக்களின் தேஜஸ் என்கிறார் ஸுச்ருதர். ஸுச்ருத ஸம்ஹிதையின் வியாக்யாதாவான டல்ஹணர் ''அத்ர சுக்ரமோஜ: இதிப்ரோக்தம் சுக்ரௌஜஸோர பேதாத் அபரம் தைல க்ஷௌத்ர வர்ணத்வயம் ப்ராப்தம் | நசாத்ர சுக்ரௌஜ ஸோர்பேத : ஸ்வீகர்த்தவ்ய : | ரக்தாதி தாது ஸ்வேஹ பரம்பரா ஹேதுக : ஸ்நேஹ : சுக்ரம், சுக்ர ஸ்நேஹாத் க்ஷீரஸ்த கிருதமிவாபிந்நமோஜ : சுக்ரேண | ஸு. ஸூ. 15-23. எனத் தன் அபிப்பிராயமாக சுக்ரத்தையும் ஓஜஸ்ஸையும் ஒன்று என்று குறிப்பிடுகிறார்''.

யே ந ஓஜஸா வர்த்தயந்தி ப்ரீணிதா : ஸர்வதேஹிந : |
யத்ருதே ஸர்வ பூதா நாம் ஜீவிதம் நாவதிஷ்டதே ||
யத்ஸார மாதௌ கர்ப்பஸ்ய யத்தத் கர்ப்ப ரஸாத்ரஸ : |
ஸம்வர்த்தமாநம் ஹ்ருதயம் ஸமாவிசதி யத்புரா. ||
யஸ்ய நாசாத்து நாசோஸ்தி தாரியத் ஹ்ரு தயாச்ரிதம் |
யச் சரீர ரஸ ஸ்நேஹ : ப்ராண யத்ர ப்ரதிஷ்டிதா ||
தத்பலா : பஹுதாவா தா : பலந்தீதி மஹாபலா : ||

ச. ஸூ. 30-1.

எனக்கருவாக உருப்பெற்ற நிலையிலிருந்து நம்முடன் தொடர்பு கொண்டு நமக்கு உயிரூட்டும் பொருள் ஓஜஸ். அது சரீரத்தை இதயத்தின் வழியே சுற்றிச் சுற்றி வருகிறது. பல பிரிவுகளாக பிரிந்த பத்து தமனிகள் வழியே அது சரீரத்தில் பரவுகிறது எனச் சரகர் ஓஜஸ்ஸை விளக்குகிறார்.

த்விவிதமோஜ : பரம் அபாம் ச. | தத்ர அஞ்ஜலி பரிமாணம் அபரம், அல்பப்ரமாணம்து பரம். அர்த்தாஞ்ஜலி பரிமிதஸ் யௌஜஸ : தமந்ய ஏவ ஹ்ருதயாசிரயா : ஸ்தாநம் | . ப்ராணச்ரயஸ்ய ஓஜஸ : அஷ்டௌபிந்தவ : ஹ்ருதயாச்ரயா : | ஹ்ருதி திஷ்டதி யச்சுத்தம் ரக்தமீஷத்ஸ பீதகம் || ஓஜ : சரீரே ஸ்ங்க்யாதம் | . என பரம் அபரம் என ஓஜஸ் இரண்டு விதம். எட்டு துளி அளவுள்ளது பரம் என்னும் ஒரு கையளவுள்ளது அபரம் என்றும் கூறப்படுகிறது என்று சரகர், சக்ரபாணி தத்தர் இருவரும் கூறுகின்றனர். ஆனால் சரகர் ''மஜ்ஜா ரஸௌஜ : பிசிதம் ச தூஷ்யா : ரஸச்ச ஓஜ : ஸ்ங்க்யாத : என ப்ரமேஹப்ரகரணத்திலும், ''தஸ் மிந்காலே பசத்யக்நி : யதன்னம் கோஷ்ட ஸ்ம்ச்ரயம் | மலிபவதி தத்ப்ராய : கல்பதே கிஞ்சிதோஜஸே || என் ராஜ யக்ஷ்ம சிகித்ஸையிலும் ரஸ

தாதுவையே ஓஜஸ் என்கிறார். சக்ரபாணி தத்தர் பாண்டுவில் குறிப்பிட்ட "யேசாந்யேப் யோஜஸோ குண:" என்பதை விளக்கும் போது ''ஓஜஸ: ரக்த தாது ரூபஸ்ய குண:'' என ரக்தத்திற்கு ஓஜஸ் என்று பெயர் கொடுக்கிறார். மேலும் ''தந்த்ராந்தரே து'' என்ற தலைப்பில் ''ஓஜ: சப்தேந ரஸோப்யுச்யதே, ஜீவ சோணிதமபி ஓஜ: சப்தேநாமநந்தி, ஊஷ்மாணமபி ஓஜ: சப்தேநாபரே வதந்தி, என மூன்றுவிதமான விளக்கங்களை வேறொரு நூலிலிருந்து எடுத்துரைக்கிறார்.

''ஸர்வதாதூனாம் ஸாரஸமுதாய பூத ஓஜ: | தே ரஸாதி ஸாரரூப
தயா ரஸாதிப்யோ பிந்நமோஜ இதி பிருதக் தாதுத்வேந
உபதா துத்வேந வா நிர்தேச்ய மிதி பச்யந்தி |
ப்ரமரை: பலபுஷ்பேப்ய: யதா ஸஞ்சியதே மது |
தத்வதோஜ: சரீரேப்ய: குணை: ஸம்ப்ரியதே ந்ருணாம் ||

சக்ரபாணி – ச.ஸூ. 30–57.

என புஷ்பங்களிலின்றும் சேமிக்கப்படும் தேன் போன்று ரஸாதி ஸப்ததாதுக்களினின்றும் ஓஜஸ் சேமிக்கப்படுவதாகவும், ஸப்த தாதுக்களின் ஸாரமாகவும், ஸப்ததாதுக்களைக் காட்டிலும் வேறு அல்லாததாகவும் ஓஜஸ்ஸை சிலர் விளக்குகிறார்கள்.

பேளர் ''இஹகலு ஓஜஸ்தேஜ: சரீரே நித்யே ச பவத: | தயோ: ஸ்தாநாநி த்வாதச பவந்தி | தத்யதா ரஸசோணித மாம்ஸ மேதோஸ்தி மஜ்ஜாசுக்ல ஸ்வேதபித்த ச்லேஷ்ம மூத்ர புரிஷாணீதி பே. சா. 5–1. என ஸப்த தாதுக்கள், பித்தம், கபம் மூன்று மலங்கள், இவற்றை ஓஜஸ்ஸின் ஸ்தானமாகக் குறிப்பிடு கின்றார்.

இவ்விதம் ரஸ தாது, ரக்த தாது, ஜீவசோணிதம், சுக்ரம், ஸப்த தாதுக்களுக்குள் அமைந்தஸ்நேஹம், கருவாக உருவானது முதல் அமைந்த ஸாரபாகம், ஊஷ்மா என்ற வெப்பம் என ஏழு விளக்கங்கள் ஓஜஸ் என்ற பொருளுக்குக் கூறப்படுகின்றன

இப்பொழுது பாண்டு ரோகங்களில் சீர்கெடும் ஓஜஸ் எது? இதைச் சாகஸம்ஹிதையின் மூலம நன்கு விளக்குகிறது.

பாண்டுவின் ஸம்ப்ராப்திக் கிரமத்தில் ''யேசாந்யேப் யோஜஸோ குண: ... ... ...சிதிலேந்த்ரிய:'' என ஓஜஸ்ஸின் தரம் க்ஷயித்துவிடுகிறது. ஆதலால் ரக்தம், மேதஸ் முதலியன குன்றி ஸாரமற்று இந்திரியங்கள் சோர்ந்துவிடுவதாகக் கூறுகிறார். பூர்வோதாது: பரம் குர்யாத் விருத்த: க்ஷீணச்ச தத்விதம் |

எனக் குன்றிய ரக்தம் மேதஸ் இவைகளுக்கு முதல் தாதுவான ரஸதாதுவின் சீர்கேடோ க்ஷயமோதான் காரணமாக இருக்க முடியும் எனவே இங்கு ஓஜஸ் என ரஸ தாதுவைத்தான் குறிப்பிடுகிறார் ரஸதாதுவிற்கு ஓஜஸ் என்று பெயர் சூட்டியுள்ளதைக் கீழே ப்ரமேஹப் பிரகரணத்திலும், ராஜயக்ஷ்மா ப்ரகரணத்திலும் நாம் கண்டோம். அதனால்தான்,

'பாண்டுத்வம் ஸ்ரோதஸாம் ரோத : க்லைப்யம் ஸாத : க்ருசாங்கதா
ரஸப்ரதோஷஜாரோகா.'' என ரஸதுஷ்டியில் பாண்டு உண்டாவதாகச் சரகர் கூறுகிறார். அதேபோல் பேளரும்,

"ததா ரோகா : ப்ரவர்த்தந்தே க்ரஹணீ தோஷ ஜா நருணும் |
ஜ்வர : காஸ : பாண்டுரோக : ச்வயது : பரிகர்த்திகா ||
அருசி : ச அவிபாகச்ச குல்மார்சாம்ளி பகந்தரம் |
அதிஸாரச்ச குஷ்டம் ச சூலாந்யலஸகோ ப்ரம : ||
ஏதாம்ச் சாந்யாம்ச்ச ஜநயத்ரோகா நஸ்ய விலாஹித : |
க்ரஹணீ தூஷிதா ஜந்தோ : || பேள. சி. 13-111.

எனப் பாண்டுரோகத்தை கிரஹணீ துஷ்டியால் ஏற்பட்டதாகக் கூறுகிறார்.

(தொடரும்)


## நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்



மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***


MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

## இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனுனி மருநதுகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாககப் பாடுபடுகிறது.

IMPCOPS

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

**சக்தி விலாஸ வைத்தியசாலா**

கரூர் (S. Ry.)


Edited an d published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press, Tiruchirapalli-2.